# கடந்துபோகாத கிருபை

**ஆண்டவரே, உம்முடைய கண்களில் எனக்குக் கிருபை கிடைத்ததானால், நீர் உமது அடியேனைவிட்டுக் கடந்துபோகவேண்டாம். (ஆதி 18:3)**

ஆண்டவரை ஏற்றுக்கொண்டு, அழைப்பிற்குக் கீழ்ப்படிந்து தன்னை அர்ப்பணித்தவனாகிய ஆபிரகாமுக்கு, ஆண்டவரின் கண்களில் கிருபை கிடைத்தபடியினால், **"அடியேனைவிட்டுக் கடந்துபோகவேண்டாம்"** என்ற வேண்டுதலுக்கு ஆண்டவர் செவிகொடுத்தார். பூமிக்கு வானம் எவ்வளவு உயரமாயிருக்கிறதோ, அவருக்குப் பயப்படுகிறவர்கள்மேல் அவருடைய **கிருபையும் அவ்வளவு பெரிதாயிருக்கிறது** (சங் 103:11).

நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே (புல. 3:22); **எல்லா மனிதர்களையும் காப்பது அவரது கிருபையே**; என்றாலும், இது கிருபையின் முதற்பரிமாணமே; விசுவாசிகளாகவேண்டும் என்ற விருப்பத்தினாலேயே இன்றும் இத்தகைய கிருபை வெளிப்பட்டுக்கொண்டிருக்கின்றது. எனினும், அப்பொல்லோவைக் குறித்து எழுதப்பட்டபோது, "அவன் அங்கே வந்தபின்பு வெளியரங்கமாக யூதர்களுடனே பலமாய்த் தர்க்கம்பண்ணி, இயேசுவே கிறிஸ்து என்று வேதவாக்கியங்களைக்கொண்டு திருஷ்டாந்தப்படுத்தினபடியால், **கிருபையினாலே விசுவாசிகளானவர்களுக்கு** மிகவும் உதவியாயிருந்தான்" (அப் 18:28) என்று கிருபையின் இரண்டாவது பரிமாணத்தை வாசிக்கின்றோமே. மேலும், கிருபையின் மூன்றாவது பரிமாணமாக, **கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்**; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு (எபே 2:8) என்று எழுதுகின்றார் பவுல். இந்நிகழ்வுகள் தரும் செய்திகள் என்ன? **ஆண்வர் நம்மீது காட்டும் கிருபையும், கொடுத்திருக்கும் கிருபையின் காலங்களும் அவர்மீதுள்ள விசுவாசத்திற்கு நேராக நம்மை வழிநடத்தவேண்டும் என்பதும்; அந்த விசுவாசம் நம்மை இரட்சிப்பினை அனுபவிக்கச் செய்து "அடியேனை விட்டுக் கடந்துபோகவேண்டாம்" என்று உள்ளத்தையே அவருக்கு ஆலயமாக்கி அங்கேயே தங்கிவிட அவருக்கு இடமளிக்கவேண்டும் என்பதுதானே.**

கிருபையின் இத்தகைய நிலையினைப் புரிந்துகொள்ளாத பலர், வாசலில் நின்று தட்டிக்கொண்டிருந்தாலும் ஆண்டவருக்குக் **கதவைத் திறக்காமல், அவரைக் கடந்துபோகச் செய்துவிடுகின்றனர்**; விளைவு, "இராக்காலங்களில் என் படுக்கையிலே என் ஆத்தும நேசரைத் தேடினேன்; தேடியும் நான் அவரைக் காணவில்லை. நான் எழுந்து நகரத்தின் வீதிகளிலும் தெருக்களிலும் திரிந்து, என் ஆத்தும நேசரைத் தேடுவேன் என்றேன்; தேடியும் நான் அவரைக் காணவில்லை" (உன் 3:1,2) என்ற நிலையை தாங்களே தங்கள் வாழ்க்கையில் உருவாக்கிக்கொள்கின்றனர். எனவே இயேசு கிறிஸ்து, பகற்காலமிருக்குமட்டும் நான் என்னை அனுப்பினவருடைய கிரியைகளைச் செய்யவேண்டும்; **ஒருவனும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் வருகிறது** (யோவா 9:4) என்று போதித்தார். இன்று வீதிக்கு வீதி சபைகள், வீட்டைத் தேடிவரும் ஊழியர்கள்; என்றாலும், கதவைத் தட்டும் கர்த்தரின் சத்தத்திற்குச் செவிகொடுக்காவிட்டால், இராக்காலத்தில் "சபைகளும், தேவ ஊழியர்களும்" கூட அப்படிப்பட்டவர்களுக்கு உதவிசெய்ய முடியாது. எனவே, வாசல்களே, உங்கள் தலைகளை உயர்த்துங்கள்; அநாதி கதவுகளே, உயருங்கள்; மகிமையின் ராஜா உட்பிரவேசிப்பார் (சங் 24:7). இப்பொழுதே அநுக்கிரககாலம், இப்பொழுதே இரட்சணியநாள் (2கொரி 6:2).

நான் நேசிக்கிறவர்களெவர்களோ அவர்களைக் கடிந்துகொண்டு சிட்சிக்கிறேன்; ஆகையால் நீ ஜாக்கிரதையாயிருந்து, **மனந்திரும்பு இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்**; ஒருவன் என் சத்தத்தைக்கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான் (வெளி 3:19,20) என்கிறார்.

நான் நித்திரைபண்ணினேன், என் இதயமோ விழித்திருந்தது; **கதவைத் தட்டுகிற என் நேசரின் சத்தத்தைக் கேட்டேன்**: என் சகோதரியே! என் பிரியமே! என் புறாவே! என் உத்தமியே! கதவைத் திற; என் தலை பனியினாலும், என் தலைமயிர் இரவில் பெய்யும் தூறலினாலும் நனைந்திருக்கிறது (உன் 5:2) என்று பனியும், தூறலும் பொழிந்துகொண்ருக்கும் இரவிலே, மணவாட்டியாகிய நமது வீட்டைத் தேடி அவர் வருவதன் காரணம் என்ன? **அவர் தன்னைப் பாதுகாத்துக்கொள்ள அல்ல, நம்மைப் பாதுகாத்துக்கொள்ளவே.**